# உதட்டில் உதடு

சுஜாதா



# உதட்டில் உதடு

சுரதா

அஜந்தா பதிப்பகம்
கீழ்ப்பாக்கம் :: சென்னை-10

முதற் பதிப்பு: ஜனவரி '53.

கவிதைகளின் முழு உரிமை கவிஞருக்கே.

அச்சிட்டது:
ஸ்ரீ பாரதி பிரஸ்,
சூளை, சென்னை.

## உள்ளே!

உதட்டில் உதடு
எச்சில் முத்தம்
நான்கு வேலை
இருட்டுக்கு சேலை தந்தாள்
இனிக்கும் பதில்
சம்மதம்
படுக்கை சுகம்
காற்றுக்கு வர்ணம் பூசலாம்
யானை வால் கரும்பு
நாடோடியின் குரல்
வாலிபம் ஏற்பட்டது
அவன் கேட்டது
தித்திப்பு லோகம்
பருவம்

விலை 6 அணா

# சுரதா அழைக்கிறார்!

"என்னய்யா, இது! காவேரிபோல கொதித்தெழாமல், சும்மா தஞ்சாவூர் பொம்மையாய் இருக்கிறாயே" என்று தஞ்சாவூர் வாசியோ, அல்லது அதை அடுத்த தெற்குப்புற வாசியோ கூறுவான்.

"என்னையா, இது! ரேஸிலே கோட்டை விட்டாப்பலே குந்திக்கிட்டிருக்கியே!" என்பான் மதராஸ் மண்ணிலே பிறந்தவன்.

ஒருவனுடைய சலனமற்ற தன்மையை உரை வார்த்தையால் கூறுகிறபொழுது இப்படித்தான் சொல்ல முடியும். 'இழுத்தல்' என்ற வார்த்தை 'இசுத்தல்' என்று திரிந்து உலாவுவதைப் போலே முன்னையவனும், இன்றைக்குப் பிந்தியவனும் சலனமற்ற தன்மையை எப்படிக் கூறியிருப்பானோ, கூறலாமோ—தெரியாது.

வார்த்தையிலே இழுத்துக் கட்டும் எண்ணங்கள் நேர்முகமாக எதிருக்கெதிராக ஏதாவதொரு எழுட்சியை உண்டுபண்ண முடியுமே தவிர, எதிர்கால நீண்ட இலக்கிய வெள்ளத்தில் நீந்தி, என்றைக்கும் எதிரொலிக்க முடியாது.

ஆனால்—

கவிதைச் சிமிழுக்குள் பூட்டி யனுப்புகிற வார்த்தைகள், ஒரு கட்டுக் கோப்புக்குள்ளே என்றைக்கும் நீந்திப் பறக்கிற 'இறவாத் தன்மை'யைப் பெற்று விடுகிறது.

அதனால்தான்—

"ஏயா இதுவேன் கோல்! முனைந் துபோரா
தெழுதோ வியமா யினையே!"

எனப் பகர்ந்த வில்லிப்புத்தூரான் காலக் குறுக்குப் பாய்ச்சலுக்கெல்லாம் ஈடு கொடுத்துவிட்டு, இன்றும் புதுமையாக உலவுகிறான். மதராஸ்காரன் சொன்ன ரேஸ் ஆட்டமும், தஞ்சைக்காரன் மொழிந்த தஞ்சாவூர் பொம்மையும் இன்றைய மனிதனின் மனத்தைச் சொல்லலாம். ஆனால் என்றைய மனிதனின் மனத்தைச் சொல்வதற்கு அவை வலுப்பெறவில்லை.

…மையாய் சொல்ல, கவிதை
…மய; கவிஞன் வேண்டும். தமிழுக்கு வில்லனை—அப்படியொரு பாத்திரத்தை—தந்த ராமாயணத்தை உரை நடையிலே கம்பன் எழுதி யிருப்பானேயானால் 'ராவணன்' என்ற செருக்கான ஒரு பாத்திரம் முழு உருவத்துடன் நமக்குக் கிடைத்திருக்க முடியாது. அவனுக்கு அடுத்து வந்த புலவர்கள், உரைநடையிலே ராவணன் குந்தியிருந்திருந்தால் கொஞ்சம் கொஞ்சமாக அவனை அரித்துச் சாப்பிட்டு நமக்கு ஒரு மூளி ராவணனைக் கொடுத்துவிட்டுப் போயிருப்பார்கள்.

அது மட்டுமல்ல. பண்டைய நாகரிகங்களின் பட்டயக் கல்லாக, மனித சமுதாய நிழலில் விழுந்த பண்புகளின் பாசறையாகக் கவிதை, சங்கம் முழங்கி வருகிறது.

அழகை உடம்பிலும், அன்பை நெஞ்சிலும் சேர்த்து, கன்னியாகுமரியிலே மாம்பழச் சாற்றை எடுத்து, இருக்கும் வெளிச்சத்தை 'இச்'சென்ற சத்தத்தால் அணைத்து 'உதட்டில் உதடு' என்று இளமைக்கு 'ஆளுகை' தந்து ஆர்ப்பரிக்கிறார் கவிஞர் சுரதா.

வில்லிப்புத்தூராரின் நிழல்கீற்றாக இருந்து கவிஞர் சுரதா, உதட்டிலே உதடு சேர்ப்பதால், எச்சில் முத்தம் கொடுப்பதாலேயே இருட்டுக்குச் சேலை தருவது இனிப்பாய் இனிக்கிறது. அவர் உரை நடையிலே இருட்டுக்குச் சேலை தந்திருந்தால், அது தரும் சத்தம் சுவைச் சத்தாக இருக்காது. காமக் களிநடனம் புரியும் பிரகிருதி வாதமாகத்தான் இருந்திருக்க முடியும்.

காலக் காவேரியின் சுழிப்பு எல்லைகளைப் பந்தமாக வைத்துச் சுழற்றி, நீரும் நெருப்பும் கொள்ளாத கவிதை எட்டிலே பூட்டியிருக்கும் சுரதா, எழுத்தாளனைப் போல 'வாழுங் காலத்து'ப் புழுவல்ல. எதிரிக்குச் சதிராடி எற்றம் புரியும் அவர் 'எக்காலத்தும்' வாழும் உரிமை பெற்றவராகி விடுகிறார் இக்கவிதைத் தொகுப்பின் மூலம்.

கவிஞர் சுரதாவால், கலாவாணி—

புலமைக்கு அழைப்புத் தந்தாள்—புரட்சி
புதுமைக்குப் பட்டம் தந்தாள்.

சென்னை,
—1—1953.

வாசவன்.

# உதட்டில் உதடு

தொங்கும் சூரியன் தொலைந்து, வீடு
எங்கும் விளக்கு எரியும் நேரம்.

கூவும் கோழியின் கழுத்து போன்ற
அரிவாள் மணையில் கறிகாய் தன்னை
அரிந்து கொண்டு இருந்தாள் அஞ்சலை.

அஞ்சலை, நிலக்கரி நிறந்தான்; ஆயினும்,
உடலின் அமைப்பு; உளியின் உதவியால்
கட்டிப் பாறையில் வெட்டிய சிலைதான்!

அவளது புருஷன் அஞ்சான் என்பவன்,
புளியங் கொட்டை போன்ற கண்கள்
உள்ள ஆட்டை ஓட்டிக் கொண்டு
வந்தான் வீடு. வந்தான் அவளிடம்.

நின்ற வினைக்குறி படுத்தது போல
இருக்கும் மீசையை இடது கையால்
முறுக்கிக் கொண்டே மனைவியைப் பார்த்து,
"நறுக்கிய மாம்பழச் சாறே! கேட்பாய்,
கன்னியா குமரி சென்று; அங்கே,
பள்ளக் கடலில் பதுங்கி இருக்கும்
முத்துக் குளிக்க சித்தங் கொண்டேன்.

சித்திர மயிலே! சென்று வரட்டுமா ?''
என்றான். "நல்லது'' என்றாள். சென்றான்.

அஞ்சான் சென்று ஐந்துநாள் ஆனது.
அஞ்சலை தூங்கியும் ஐந்துஇரா வானது.
ஒருதினம் காலை ஒன்பதே கால்மணி.
பள்ளிச் செல்லும் பையன்கள் இருவர்
கன்னியா குமரிக் கடலில் பெரும்புயல்
வீசும் சேதியைப் பேசிக் கொண்டு
போவதை, அந்தப் பேதை கேட்டு,
அவருக்கு எதுவும் ஆபத்து நேர்ந்ததோ''
என்று நினைத்தாள். நினைத்த உடனே,
அடிக்கடி அசையும் இமையில் வந்து
தொத்தி, கண்ணீர், முத்தாய் உதிர்ந்தது!

அழுத துளியும் பொழுது மாக
இருக்கும் போது, இவளுக் காக
கணவன் எழுதின கடிதம் வந்தது.
ஆவ லாக அதனைப் பிரித்தாள்:
"அஞ்சலை! எனது ஆசையின் உதவியே!
உன்னைப் பிரிந்த ஒருமா சமாக,
இரவு உலகம் இனிக்க வில்லை.
மனசு எல்லாம் மந்தம் ஆவுது.
கொத்தும் கிளிநான் குமரிக் கரையிலும்,
கொய்யாப் பழம்நீ கூரை வீட்டிலும்,
இருப்பதால் அல்லவா இந்தத் தொல்லை!
ஆகையி னாலே தோகை மயிலே!
நாளை ராத்திரி நிச்சயம் வருகிறேன்''
என்று எழுதி இருப்பதை; வர்ணப்
பார்வை இரண்டு பார்க்க, மனதால்

வாசித்து முடித்தாள். முடிந்ததும் உதடுகள்
சந்தோஷத்தால் சிவந்து போயின !

அடுத்தநாள், உதயம், நடுப்பகல், முடிந்து
அந்தி நேரம் வந்து பிறந்தது.
அத்தான் ஞாபகம் அவளுக்குச் சுரந்தது.

உடனே அந்தக் குடும்பத் தலைவி
நாயின் நாக்கு போன்ற பாதம்
நாட்டியம் ஆட, தோட்டம் சென்று
பூவும் அரும்பும் பறித்துச் சூடி
வெள்ளைச் சிரிப்புடன் உள்ளே வந்து
புடவை மாற்றி பொட்டு திருத்தி
அழகை உடம்பிலும் அன்பை நெஞ்சிலும்
தேக்கிக் கொண்டே, திறந்த விழியும்
துடித்த நினைப்புமாய், படுத்துக் கிடந்தாள்.

"அன்னமே !" என்று அழைத்த படியே
ஆளன் வந்தான். அழகி பறந்து
"மச்சான் !" என்று மார்பில் படிந்தாள்.
வெடுக்கென் றணைத்தான். "விடாதீர்" என்றாள்
உடனே,
உதட்டில் உதடு புதைத்து எடுக்கும்
முத்தம், அதுதரும் சத்தம்—வளர்ந்தது.
இருந்த வெளிச்சம் இவர்களால் அணைந்தது !

# எச்சில் முத்தம்

சந்திரனைப் போல்தோசை!
சுவையுள்ள அதிரசங்கள்,
வெந்துபல மடைந்த
கொழுக்கட்டை, கிழங்குவகை,

வளைந்த நிலாப்பிறையின்
வடிவத்தைக் காட்டுகின்ற
சுளையுள்ள நாரத்தை,
சத்துள்ள வேர்க்கடலை,

சுற்றிவைத்த கம்பிச்
சுருள்முறுக்கு, நாவல்மரம்
பெற்றெடுத்துக் கொடுத்த
பழங்கள்—இவற்றை எல்லாம்

அங்காடிக் கூடையிலே
எடுத்துவைக்கும் தன்மகளை
மங்கம்மா பார்த்து,
"மாங்குயிலே! மனைவிளக்கே!

இடித்துவைத்த மாவை,
எடுத்தொரு பானையில்வை.
கடிக்கின்ற குரங்கின்
கைவிரலைப் போலிருக்கும்

பயிற்றங்காய் தன்னைப்
பறிக்காதே, பெருக்கட்டும்.
வயலூரு சந்தையிலே
வாங்கிவந்த வெற்றிலையை,

ஈரத்துணி சுற்றி எடுத்துவை''
என்று சொன்னாள்,
ஊருக்கே போழகி
உடனே அதைச்செய்தாள்.

★

அங்காடி விற்றுவரும்
மங்கம்மா மறுபடியும்
சங்கீதம் பாடுகின்ற
பெண்வண்டு முகம்நோக்கி,

“ஏடுவிட்டுக் கொண்டிருக்கும்
இளவாழைக் கன்றுக்குப்
பாடுபட்டுத் தண்ணீர்
பாய்ச்சி வளர்த்துள்ளோம்.

வேலி, வெகு மோசம்.
ஆடெல்லாம் ஊசிக்குள்
நூலுபோலே புகுந்து
தின்றுவிடும், பார்த்துக்கொள்.

வயல்நுழையும் காவிரியே,
வளர்ந்துவரும் நெல்குருத்தே !
தயிர்க்காரி இங்குவந்தால்
சில்லரையைக் கொடு''—என்று

நொய்புடைத்துக் கொண்டிருக்கும்
வேலையை நிறுத்தித்தன்
கையெடுத்தாள், தன்சுருக்குப்
பையெடுத்தாள்; அதைஎடுத்துக்
காசையெடுத்தாள், கொடுத்தாள்.
வாரிக்கொண் டையைமுடித்தாள்
வாசமலர் அணிந்த
மங்கைதன் தாயிடத்தில்;
"அடுப்பிலே வைப்பதற்கு
ஒன்றுமே இல்லையம்மா!"
"ஒடித்துவைத்த மிலாறு
ஒருகட்டு இருக்குதங்கே?"
"மான்கொம்பு போலிருந்த
அந்தமிலா றெல்லாம்
மீன்குழம்பு வைத்து
முடிப்பதற்கே போதவில்லை!"
"அப்படியா! ஆகட்டும், .
குப்பனிடம் நான்சென்று
இப்போதே விறகுக்கு
ஏற்பாடு செய்கின்றேன்"
என்றுசொல்லி, 'வெய்யில்
அதிகரிக்கு' தென்றுசொல்லி
தன்கூடையைத் தூக்கித்
தலைமேலே வைத்திட்டாள்.
"'வரும்போது பனங்கிழங்கு
வாங்கிவா'ம்மா" என்றாள்.
"சரி" என்றாள். "வீட்டில்
பத்திரம்" என்றாள். சென்றாள்.

பெற்றதாய் போனஉடன்,
பூத்தமலர்க் கொடியாள்
முற்றாத மாம்பிஞ்சை
வெட்டிவைத்துக் கொண்டிருந்தாள்.

★

கதிரடித்து நெல்குவிக்கும்
களத்தில், ஒருபுறத்தில்
முதிர்ந்த வயதுடையாள்
வியாபாரத்தைத் தொடர்ந்தாள்.

★

செந்தூரப் பொடிபோலே
செக்கச் சிவந்திருக்கும்
அந்திப் பொழுதினிலே
ஆகாயத் தின்மேலே

சாய்ந்திருக்கும் சூரியனை
சஞ்சரிக்கும் மேகத்தை,
வாய்திறந்து கூவுகின்ற
வர்ணப் பறவைகளை,

பட்டங்கள் வால்அவிழ்ந்து
பறக்கின்ற காட்சிதனை
சுட்டும் விழியாலே
சுவைபார்த்துக் கொண்டிருந்தாள்,

அங்காடிக் காரிபெற்ற
அருமைமகள் கண்ணம்மா.
மங்கைஅவள் இவ்வாறு
இருக்கும் தருணத்தில்,

செல்வம் குடியிருக்கும்
தெருவில் முழங்குகின்ற
கல்யாண வாத்தியத்தின்
ஓசைவர, அதைக்கேட்டு

"பெரியநிலா முளைக்கும்
பன்னீர் இரவுதனில்
பருவமலர் தெளித்த
பஞ்சணையிலே படுத்து

அன்புக்கு அன்புதந்து
ஆனந்தக் காதல்செய்து
பொன் அழகன் தேகத்தைப்
போர்த்தபடி தூங்க, அந்த

அன்னந்தால் இனிமேலே
ஆகும். அதுபோலே
என்றைக்கு அந்த
இன்பம் எனக்குவரும்?

'பொதிகைமலைச் சந்தனமே!
பூவுலகில் எல்லோரும்
மதிக்கும் தமிழே! என்னை
மயக்குகின்ற போதையே!

ஓடிநிலம் கழுவும்
ஓடையிலே பூத்திருக்கும்
வாடாமலரே, அதன்
வாசனையே, எச்சில்முத்தம்

ஓசையுடன் கொடுத்து
உதவுவாய்' என்றுஎன்னை
ஆசையுடன் கேட்கஒரு
அத்தான் கிடைப்பதெந்நாள்?

"முத்துச் சிரிப்புதனை,
முடிவைக்கும் என்உதட்டைக்
கொத்துங்கள் அத்தான், வாய்க்
கோவைப் பழத்தாலே'

என்றுநான் சொல்லி,
இதழ்கள், புதுத்தோள்கள்
கன்னங்கள் கற்கண்டு
முத்தம். கொடுப்பதென்நாள்?"

என்றுஅடுக் கடுக்காய்
எண்ணமிட்டு கண்ணம்மா
நின்றுகொண் டேயிருந்தாள்.
நிற்கும் மரத்தருகில்,

அந்தச் சமயத்தில்
ஆருடம் சொல்லுபவன்
அந்த வழியாக
வருவதைத் தான்பார்த்து

செங்கரும்பு போல்இனிக்கும்
சொல்லாலும், கையாலும்
'இங்கேவா' என்றழைத்தாள்
எட்டிப்பழ நிறத்தாள்.

கொட்டுகின்ற தேளின்
கொடுக்குமீசையை முறுக்கி
விட்டுக்கொண்டே வந்தான்,
வேல்விழியாள் வீட்டுக்கு.

வண்ண மலரழகி
வந்தவனிடம் வந்து,
"என்கையைப் பார்த்துச்சொல்"
என்றுசொல்லி உட்கார்ந்தாள்.

ஈரவடிப் புருவம் பார்த்தான்
கன்னத்தில் மின்னல் பார்த்தான்
சேவலின் தாடி வர்ணம்
சிவப்பாகும் உதட்டில் பார்த்தான்
பூவுக்குப் புருஷ ஞகும்
வண்டோடு கூந்தல் பார்த்தான்
தாவிடும் ஆசை யாலே
தனித்தனி அங்கம் பார்த்தான்.

'மான்வந்து கண்ணுக் குள்ளே
வளருதே! துள்ளும் கெண்டை
மீனுக்கு இந்தப் பெண்ணின்
முகத்திடம் வேலை என்ன?
மான்விழி இவள் விழிக்குள்
இருப்பதேன்?' என்று எண்ணி
தேன்பார்த்தான் பேச்சில், ரேகைத்
தொழில்பார்த்தான், பார்வையாலே.

மலர்க்கொடி போலே ஆடி
வளர்கின்ற இடையைப் பார்த்தான்.
'நிலத்திலே நிலா விழுந்து
விட்டதா? முகமா? இவ்வூர்க்
குளத்திலே பூத்திருக்கும்
தாமரை தானு?' என்று
தலைதூக்கிப் பார்த்தான், தையல்
தலையைத் தூக்காதபோது!

கண்ணுடி ஓடு போலே
நகநகம், விரல்கள், பொட்டு
உண்டாக்கும் அழகு, காதில்

ஒளிவீசும் வெள்ளைக் கம்மல்,
கண்ணம்மா காலில் ஒட்டிக்
கொண்டுள்ள சிலம்பு, அந்தக்
கன்னியின் கையில் சுற்றிக்
கொண்டுள்ள வளையல் பார்த்தான்.

இடதுகை தன்னில் ஓடும்
கைரேகை தன்னைப் பார்த்து
"வெடித்திட்ட அரும்பே! ஆறு
வாரத்தி லேகல்யாணம்
நடந்திடும்; உனக்குப் பிள்ளை
நாளுன்கு பதினு" றென்றான்.
உடைக்காத சிறு உளுந்தின்
உட்புறம் போல் சிரித்தாள்.

அரிசியைக் கேட்க வந்த
எதிர்வீட்டுக் கிழவி "ஐயா!
சுரைக்காயின் விதையைப் போலே
சிரிக்கின்ற மாதை, இன்னும்
பறிக்காத பூவை, கொய்யாப்
பழத்தினை, பறிக்கக் காத்து
இருப்பவன், இவளை மாலை
இடுபவன் அழகன் தானு?

படிப்போடு ஒழுக்கம் உள்ள
பையனு? இன்பம் காணத்
துடித்திடும் வயது வந்த
தோகைக்குப் பொருந்து வானு?
எடுத்துரை!" என்று கேட்டு
இடதுகை விரலை நெட்டி

ஆடிக்கொண்டிருந்தாள்; மூக்கை
உறிஞ்சி கொண்டிருந்தாள் மங்கை.

மேல்வேட்டி போட்டுக் கொண்டு
மீசையை, ஆட்டுக் குட்டி
வால்போல மேலே தூக்கி
வளர்த்துள்ள இளைஞன், பச்சை
நூல்சேலை உடுத்தி யுள்ள
நங்கையைப் பற்றிக் கேட்ட
கேள்விக்கு பதிலைச் சொல்லத்
தொண்டையை கனைத்துக் கொண்டான்.

"வெண்பஞ்சு போல் நரைத்து
இருக்கின்ற பாட்டி அம்மா!
நண்டுக்கண் போல் இருக்கும்
வேப்பம்பூ மாலை சூடி
மண்டலம் ஆண்ட பாண்டி
மன்னவன் போன்றோன்; கீர்த்தி
கண்டவன், கலைஞன்; இந்தக்
கோதையை மணப்பான்!" என்றான்.

கேட்டதும் மகிழ்ந்தே போனாள்
கிளிப்பேச்சுக் காரி. ஆனால்
பாட்டியோ அவனைப் பார்த்துப்
பரிகாசம் செய்தாள். காசை
நீட்டினாள். வாங்கிக் கொண்டான்.
அதிரசம் தந்தாள், பெற்றான்.
மூட்டையைக் கட்டிக் கொண்டான்,
விடைபெற்றான். எழுந்தான். போனான்.
போய்க்கொண் டேஇ ருந்தான்
புழுதிமண் வீதி மேலே!

நாய்ஒன்று அவனைப் பார்த்து
குரைத்தது; ஓடிக் கொண்டான்.
காய்க்காத மாம ரத்தின்
காலடி தன்னில் குந்தி
வாய்ப்பாட்டு பாடிக் கொண்டே
முண்டாசு கட்டிக் கொண்டான்.

அதிரசம் தனை எடுத்தான்.
அதில்அவள் உருவம் தோன்ற,
'புதிதாகப் பார்க்கும் உந்தன்
பார்வைதான் இனிப்பா? இல்லை,
மெதுவான பேச்சா? முத்தம்
வளர்க்கின்ற உதடா?' என்று
மதிதடு மாறத் தோடு
மார்பிலே அணைத்துக் கொண்டான்!

# நான்கு வேளை

## காலை

அவன் : நீலக் கிழக்கு சுடர் ஆச்சு—வயலில்
நிற்கும் கதிர்கள் முற்றிப் போச்சு;

அவள் : ஆகையினால் நீங்க
அறுவடைக்குப் போங்க
அதற்கு அரிவாள் இந்தாங்க !

## பகல்

அவன் : நெருப்பு வெய்யில் வந்தாச்சு—பனைமர
நிழலை நம்பி வீணாச்சு ;

அவள் : அந்தத் துயர் நீங்க
வந்த வெய்யில் தாங்க
முந்தானைக் குடை இந்தாங்க !

## அந்தி

அவன் : மேற்கு வானம் ரத்தம் ஆச்சு—உன்னால்
மலர்ந்த உதடு வெள்ளை யாச்சு ;

அவள் : வாசனையும் ஓங்க
சிவப்பு நிறம் தேங்க
வெற்றிலைப் பாக்கு இந்தாங்க !

# இரவு

அவன் : நிலவு, பிரசவம் ஆச்சு—உன்னால்
நித்திரை சிதறிப் போச்சு ;

அவள் : மன்னவரே நீங்க
மயக்கத்தோடு தூங்க
எச்சில் முத்தம் இந்தாங்க !

# இருட்டுக்கு சேலை தந்தாள்

உயர்வுக்கு திறமை தந்தாள் — பொது
உடைமைக்கு அரசு தந்தாள்.

உணர்வுக்கு வீரம் தந்தாள் — மொழி
வளர்ச்சிக்கு எண்ணம் தந்தாள்.

புலமைக்கு அழைப்பு தந்தாள் — புரட்சி
புதுமைக்கு பட்டம் தந்தாள்.

பதுமைக்கு அழகு தந்தாள் — தென்னம்
பாளைக்கு சிரிப்பு தந்தாள்.

அல்லிக்கு உதடு தந்தாள் — அதை
அடிக்கடி எனக்கு தந்தாள்.

இளமைக்கு வேலை தந்தாள் — தினம்
இருட்டுக்கு சேலை தந்தாள்!

# இனிக்கும் பதில்

அவள் : முற்றிக் கனிந்திட்ட கோவைப் பழம்போல
முன்பே சிவந்த உதடுகளை,

வெற்றிலை போட்டின்னும் ரத்தப் படுத்துதல்
விவேக மாகுமோ காதலரே?

அவன் : வண்டு குலவிடும் தாமரைப் பூபோன்ற
வர்ண சிவப்பு முகத்தினிலே,

வண்ணக் கிளிப்பிள்ளை வாய்நிறப் பொட்டுநீ
வைப்பது மட்டும் சரிதானா?

அவள் : மிதக்கும் நிலாமுகப் பெண்ணின் உதடுகள்
மென்று தின்கின்ற கற்கண்டு என்றால்,

இதுவரை எத்தனை முத்தமிட்டும் அவை
இன்னும் கரையா திருப்பது ஏன்?

அவன் : வெட்டிய மாம்பிஞ்சு போன்ற விழியினால்
'வாருங்கள்' என்று அழைப்ப வளே,

சுட்ட கொழுக்கட்டை மேல்கலத் தண்ணீரைக்
கொட்டினும் மாவு கரைந் திடுமா?

பல்லிமுட்டை போன்ற முல்லை அரும்பினைப்
பின்னிய கூந்தலில் வைத்த வளே,

ஒல்லி இடைதன்னில் மின்னல் அடிக்குது
ஓசை மட்டும்அங்கு இல்லாத தேன்?

அவள் : சுற்றிப் படரும் கொடியின் உடம்பில்
ஜெனித்த மலர்போல் சிரிப்ப வரே,
சற்றுத் திரும்புங்கள் ; கன்னத்திலே அந்த
சப்தத்தை உண்டாக்கிக் காட்டு கிறேன் !

# சம்மதம்

ஆண் : நிமிர்ந்த பம்பரம் போல—யானை
நெற்றியின் மேடு போலே—மலை பாராய்!

பெண் : ஆகாயம் கட்டிய கொட்டகையோ மலை—கண்ணா?

ஆண் : அசைகின்ற பூமியின் கொப்புளந்தான்மலை—கண்ணே!

ஆண் : பாம்பின் சட்டையைப் போல—வெடித்த
பட்டையில் ஊற்றிய பால் போல—அருவி பாராய்!

பெண் : பெண்கள் உடுத்தும் மேல் ஆடைதான் இப்படி ஆச்சோ?

ஆண் : தண்ணீர்க்கும் வால் உண்டு என்பதற்(கு)இது சாட்சி!

ஆண் : மரகதக் கம்பளம் மேலே—மயில்
இறகுகள் நிற்பது போலே—தோட்டம் பாராய்!

பெண் : காதலரால் இந்தத் தோட்டம் கசங்காதோ—கண்ணா?

ஆண் : குளிர்ந்த பனித்துளியாலே கல் உடையுமா—கண்ணே!

ஆண் : எறும்பு ஏந்திய பொரி போலே—சோழி
இரண்டு சேர்ந்தது போலே—அரும்பு பாராய்!

பெண் : இந்த அரும்புக் (கு) எப்போது கல்யாணம் ஆகும்?

ஆண் : இதழ்கள் மலர்ந்தபின் வண்டுக்(கு) இது தாரம் ஆகும்!

ஆண் : பகல் நிறக் கற்கண்டு போலே—பேசும்
நாக்கை வசமாக்கும் பழம் போலே—இனிப்பு தாராய்!

பெண் : முத்தம் ஒட்டினால் உதடு களைப்பாகும்—கண்ணா!

ஆண் : நித்திரை செய்வதால் விழிகள் வீணாகுமா கண்ணே?

# படுக்கை சுகம்

அவன் : பொட்டு சுமந்த வளே—காதல்
பேச்சில் சிறந்த வளே !
ஒட்டும் முத்தம் தருவாய்,

அவள் : களங்கம்
ஒழிந்த நிலா வரட்டும் !

அவன் : கட்டிக் கரும்பே உன்—உதடு
கற்கண்டுப் பால் மடி
மொட்டு உன் பற்களடி,

அவள் : மொட்டிடம்
வண்டுக்கு வேலை இல்லை !

அவன் : நீல விழி மாதே—பிரிந்தால்
நிழலும் சுடுதே யடீ
பாலின் கிண்ணமே வா,

அவள் : அது, உப்பின்
பாத்திரம் சேர்ந் திடுமோ ?

அவன் : ஆட்டுத் தலை போலே—கொண்டை
அழகாய்ப் போட்ட வளே
தோட்டத்துப் பச்சிலை நீ,

அவள் : அது, இலை
தைக்க உத வாதே !—

என்று உதட்டால் எதிர்த்தாள்; ஆயினும்
கொஞ்சும் ஆசை நெஞ்சில் இருந்தது.

ஊடுதல் பொறுத வேடுவர் தலைவன்
செடியை வளைத்து சிறுபழம் பறித்து,
அந்தப் பழத்தால் அவளை அடித்தான்.
கயல்விழி மாதும் கையால் அடித்தாள்.
அடித்த கையைப் பிடித்துக் கொண்டு
வலிக்காத முத்தம் வைத்தான் உதட்டில்.

வெள்ளை நிலாவில் வாலிபக் காதலர்
உப்பு சமுத்திரம் ஒத்த விழியால்
ஓசை இல்லாத பாஷைகள் பேசி
ஆசை முடித்து எழுந்து போகையில்
ஓடும் காற்று உடையை இழுத்தது!

# காற்றுக்கு வர்ணம் பூசலாம்

காற்றுக்கு வர்ணம் பூசலாம்—அது
காணும் பொருளாய் இருந்திடில்—மழைத்
தூற்றலை முத்தாய் மாற்றலாம்—கடல்
சிப்பி சிநேகம் கிடைத்திடில்—மேகம்
ஊற்றுகின்ற தண்ணீரினால்—மண்
வயிற்றில் கர்ப்பம் உண்டாக்கலாம்—ருசி
ஏற்றும் உதட்டிலே இருக்கும் வெளிச்சத்—தால்
இருட்டைத் தூரத்த முடியுமோ?

# யானைவால் கரும்பு

ஆரம் பத்தில் யானையின் வால்போல்
முளைத்த கரும்பை முதிர்ந்ததும் வெட்டி
வண்டியில் ஏற்றி விற்றுக் கொண்டே
போனான் கந்தன். போகையில் அந்திப்
பொழுது மாண்டு முழுநிலா வந்தது.

வந்த நிலவால் உலகம் குளிர்ந்தது.
வெள்ளி விளக்கைப் பிள்ளைகள் அழைத்தனர்.
கணவனை மனைவி, கண்ணால் அழைத்தாள்.

நெஞ்சு இனிக்கும் நிலா நேரத்தில்
வீட்டுக் காரியின் உதட்டின் நினைவு
வண்டி ஓட்டிக்கும் வந்தது. வந்ததும்,

"வெடித்த வெள்ளரிப் பழம்போல் வெண்ணிலா - ஆடை
உடுத்தா மலே திரியும் வெண்ணிலா
கடலில் உடல் கழுவும் வெண்ணிலா - குளித்தும்
கறை படிந்தே விளங்கும் வெண்ணிலா.

நோய் வராமல் இளைக்கும் வெண்ணிலா - இரவு
நேரந் தனை வெளுக்கும் வெண்ணிலா
தாய்உள்ளம் போல் குளிர்ந்த வெண்ணிலா - வெள்ளித்
தட்டுபோலே அமைந்த வெண்ணிலா.

மங்கையின் முகம் போலே வெண்ணிலா - ஒரு
மாதம் உயிரோ டிருக்கும் வெண்ணிலா
தங்க நிறம் ஆகும் வெண்ணிலா - செந்
தாமரை யின் விரோதி வெண்ணிலா.

தண்ணீரில் முகம் பார்க்கும் வெண்ணிலா - வானைத்
தடவி சுகம் பார்க்கும் வெண்ணிலா,
மின்னத் தெரியாத வெண்ணிலா - உச்சி
மலைக்கு முத்தம் கொடுக்கும் வெண்ணிலா"—

என்று பாடிக் கொண்டே போகையில்
மலையில் நிலவு மறைந்தது—அவனது
உதட்டுப் பாட்டும் உப்புபோல் கரைந்தது!

# நாடோடியின் குரல்

காக்காயின் மூக்கு போலே
கறுப்பான மேகம் எல்லாம்
கல்லுமலை மேல் படுத்து
மெல்ல நழுவுது பார்!

கோலப் புள்ளிபோல் இருக்கும்
கொடிமுல்லை அரும்பு மேலே
தேன்குடிக்க வந்த வண்டு
திரும்புது பார் ஏமாந்து!

அத்திப் பழம் சேப்பு—அவ
மேனி நிறமோ நெருப்பு
முத்தமிடும் கன்னம் ரெண்டும்
முள்ளில்லாத ரோஜாப் பூ!

மரத்தின் கிளையைப் போல
மான்கொம்பு இருந்திட்டாலும்
குருவி அதில் கூடு கட்டி
குடும்பந்தான் செய்திடுமோ?

வாலினால் நீர் குடித்து
வாயினால் பிள்ளை பெத்து
இருட்டை விரட்டு தடி
எங்க ஊட்டுத் திரிவிளக்கு!

மண்ணு குடிச்ச மழை
மறுபடியும் கேணி ஆச்சு—அதிலே
தண்ணி எடுக்க வந்தா—அவ
தலையிலே பூ பறிச்சேன் !

# வாலிபம் ஏற்பட்டது

பட்டை உடுத்திய பச்சை மரத்தினிலே—கிளை
பக்கத்திலே, இலை கக்கத்திலே, உன்னைக்
கட்டிவைத்து சாறு கொட்டியது யாரு
உந்தன் உடம்பினிலே—பழமே
உந்தன் உடம்பினிலே?

பெண்களின் பாவாடை, வெண்பட்டு சேலையிலே—தேன்
பொங்கும் உதட்டிலே, தொங்கும் காத்திலே,
வந்து இழையாமல் வீண்காலம் போக்காதே
வாழைக் குருத்தினிலே—நத்தையே
வாழைக் குருத்தினிலே!

ஆக்கும் அரிசியைத் தூக்கிச் சுமக்காமல்—மலர்
ஆகும் அரும்புகள் நீஎடுத்து வந்தால்,
தூக்கி உன்னைப் பெண்கள் தாலாட்டுக் காட்டித்—தொ
டையில் வளர்ப் பார்களே—எறும்பே, தொ
டையில் வளர்ப் பார்களே!

கத்தத் தெரியாத பூவைக் கெடுத்திடவே—அதன்
கற்பைக் கலைத்துமே, அற்பத்தனம் செய்யும்
சித்தத்துடன் வந்தால், குத்து உதை விழும்,
சங்கீதப் பூச்சி களே—வண்டுகளே
சங்கீதப் பூச்சி களே!

மாவிலைத் தோரணம் மாதிரி உட்கார்ந்து—மர
மட்டையிலே தொங்கும் கொட்டைப் பழங்களை,
காவிநிற மூக்கால் கொத்தையில், ஏற்படும்
காயத்தை ஆற்றுவ தார்—கிளியே
காயத்தை ஆற்றுவ தார்?

சாயக் கடலிலே, சந்திரன் தோணியிலே—நீ
சத்து நிரம்பிய முத்தம் கொடுத்ததால்
வாயிலே தாமரை வர்ணம் கலந்தது
வாலிபம் ஏற்பட் டது—பெண்ணே
வாலிபம் ஏற்பட் டது!

# அவன் கேட்டது

பெண் : செந்தாமரை வேண்டுமா?—வளைந்து
வந்த நிலா வேண்டுமா?

ஆண் : முந்திரிப் பருப்பு போலே
முதுகு கவிழ்ந்த நிலா;
மீன் துப்பும் எச்சில் நீரில்
மலர்ந்த ரசத் தாமரை—வேண்டாம்
மானே உன்முகந் தான்—வேண்டும்!

பெண் : முல்லை அரும்பு வேண்டுமா?—கடலில்
உள்ள முத்து வேண்டுமா?

ஆண் : ஊதும் சங்குமுள் போலே
உருவம் அமைந்த முல்லை;
ஒட்டகத்தின் பாதம்
ஒத்து இருக்கும் முத்து—வேண்டாம்
உன்வரிச் சிரிப்பு தான்—வேண்டும்!

பெண் : உண்ண உணவு வேண்டுமா?—குடிக்க
குண்டு இளநீர் வேண்டுமா?

ஆண் : புளிநகம் போல் அரிசிப்
பொங்கல், பதார்த்த வகை;
பன்னீர்போல் தண்ணீர் உள்ள

பிஞ்சு வயது தேங்காய்—வேண்டாம்
பெண்ணே உன்னுடைய தான்—வேண்டும்!

பெண்: சுடாத இரவு வேண்டுமா?—நெருப்புச்
சூரியப் பகல் வேண்டுமா?

ஆண்: வெள்ளி வெளிச்சத் தோடு
புள்ளி வெளிச்சம் சேர்ந்த
வர்ணக் கடல் இரவு;
வெய்யில் கொடுக்கும் பகல்—வேண்டாம்
உன்னைத் தழுவ இருள்—வேண்டும்!

# தித்திப்பு லோகம்

புருவத்தின் அடியிலே
பிறந்த கண்ணை மயக்க
திருநாள் சிலையை போலே
அலங்காரம் செய்து கொண்டாள்

அழுக்கு நிலா வெளிச்சம்
அடிக்கை யிலே, கோவைப்
பழத்தில் பழம் போலே
பதியவைத் தாள் உதடு.

கத்திரிப் பூவு சேலை
கலைய, கூந்தல் கலைய,
தித்திப்பு லோகம் தன்னில்
தூங்கி விட்டாள் சோர்ந்து.

இருவிழி தவிர மற்
றெல்லாம் நனைந்த படி
கரையேறி னாள் குளித்து
காயாத சேலையோடு.

# பருவம்

ஊரின் நடுவில் ஓர்குளம்; அதுவும்,
ஆமை ஓட்டின் அமைப்புபோல் இருந்தது.

கிண்ணங்கள் பரவலாய்க் கிடப்பது போல
தடாகம் முழுதிலும் தாமரைப் பூக்கள்
இருந்தன; அதோடு வண்டுகள் இருந்தன.

வாழைப்பூ போல வால்உள்ள வாத்துகள்
நீரின் அலைகளை நீந்திக் கலைத்தன.

எப்போதும் நீலமாய் இருக்கும் வானில்
சிவப்புச் சூரியன் எழுந்து, உலகை
வெள்ளை யாக்கும் விடியற் காலையில்,
வர்ணப் பறவைகள் விழித்துக் கொண்டன.

மிளகாய்க் காம்புபோல் மீசை வைத்த
வாலிபன் ஒருவன் வடக்கே இருந்து
தூண்டில் போடஅத் துறைக்கு வந்தான்.
பாத்திரம் கழுவப் பெண்களும் வந்தனர்.
பறவைகள் இறகு திறந்து பறந்தன.

வந்த வாலிபன் ஓரிடம் அமர்ந்து
தூண்டியில் வந்து தொத்தும் மீன்களை
கூண்டில் நிரப்பிக் கொண்டே இருந்தான்.

அரும்புபோல் ருது ஆகாத சிறுமியர்,
காதலால் உதட்டைக் காயப் படுத்திக்

கொண்டே இருக்கும் குடும்பப் பெண்கள்,
வயது பெருகிய மங்கையர்; அனைவரும்
மாட்டுச் சலங்கையை ஆட்டுதல் போல
பேசிக் கொண்டே பாத்திரம் துலக்கினர்.
சிலர்,
ஏசிக் கொண்டே பல்லைத் துலக்கினர்.

இவனும் இவர்களும் இவையும் இப்படி
இருந்து கொண்டே இருக்கும் போது;

புதிய ரோஜாப் பூவைக் கூந்தலில்
பதிய வைத்து, பிறைநிலா நெற்றியில்
பொட்டின் வடிவை வட்டமாய்க் காட்டி,
இடுப்பில் குடத்தை எடுத்துச் சேர்த்து
அதற்கு இடதுகை ஆதரவு தந்து,
துதிக்கை போல வலதுகை வீசி
குளக்கரை நோக்கி கமலா என்பவள்
வந்தாள்; அன்னம் வருவது போல
வந்தாள். அப்படி வருகின்ற போதே
இடையும் வளைந்தது! குடமும் அசைந்தது!

தங்க நிறத்து அங்கப் பகுதிகள்
கிழக்கு வெய்யிலில் வழக்கம்போல் மின்னின!
பெண்ணின் உதடும், கண்ணும், முகமும்,
பழமும், கடலும், நிலவும் ஆயின
பாத்திரம் துலக்கும் பெண்களில் ஒருத்தி,
கமலா வருவதைக் கண்டாள், சொன்னாள்.
அவளைக் குறித்து சிவகாமி என்பவள்
தொடர்கதை சொல்லத் தொடங்கிவிட்டாள்

சொல்லும் கதையை, எல்லோரும் கேட்கையில்
தங்கம் என்ற தையல் தும்மினாள்.

மங்களம் என்பவள் மறுத்துப் பேசினாள்.
சத்தம் பலத்தது; சிரிப்பும் அப்படி!
மேயும் மீன்கள் எல்லாம் இதனால்
தூண்டிலில் விழாது தாண்டி ஓடின.

மீன்களை முதலிலும், பெண்களைப் பிறகும்
இளைஞன் பார்த்து, எரிச்சலோடு,
"போதும், கொஞ்சம் பேசாமல் இருங்கள்.
உங்களால் மீன்கள் ஓடுகின்றன"
என்று சொன்னான். இதற்கு ஒருத்தி,

"தண்ணீர்த் துறைதான், பெண்களுக்கெல்லாம்
பேச்சு மேடை! புரிந்ததா?" என்றாள்.
மாதுரி என்ற மற்றொரு மங்கை
"வேறு துறைக்கு போ" என்று சொன்னாள்.

"இந்தத் துறையில்தான் அதிகமாய் மீன்கள்
அகப்படும்" என்றான். அல்லி என்பவள்,
"இப்படிச் சொன்னால் ஒப்ப முடியுமா?
குத்து விளக்கில், எந்தப் பக்கத்துத்
திரியைக் கொளுத்தினும், எரியும்" என்றாள்.

அல்லிக்கு மறுமொழி சொல்ல முடியாமல்
தூண்டில் காரன் கண்ணை உருட்டினான்.
குடத்தைச் சுமந்த கோதை கமலா
அந்தச் சமயம் வந்து சேர்ந்தாள்.

அவளைப் பார்த்து அன்னம் என்பவள்
"இவ்வளவு நேரம் ஏன்?" என்று கேட்டாள்.

"வீட்டில் இன்று வேலை அதிகம்,
அதனால் தாமதம் ஆனது" என்றாள்.

"ஏண்டி மறைக்கிறாய்! இப்போது தான், உன்
வீட்டுக் காரர் விழித்தார் என்று சொல்!"
என்றாள் மதுரம். இதனைக் கேட்டு
குலுக்கென்று சிரித்தது குளத்துக் கூட்டம்!
வெடுக்கென்று எழுந்து வாலிபன் போனான்!

★



சுரதா

உவமைக் கவிஞர் திரு. சுரதா அவர்களின் வைரமணிகள் போன்ற பதினான்கு கவிதைகளைத் தொகுத்து '**உதட்டில் உதடு**' எனும் தலைப்புடன் இந்நூலை வெளியிடுவதன் மூலம் நான் பெருமிதம் கொள்கிறேன். தமிழர்களும், தமிழும், தமிழகமும் என்னுடன் சேர்ந்து பெருமிதம் கொள்வார்கள்—கொள்ளும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

—***ஜெகசிற்பியன்.***

SRI BHARATHI PRESS, CHOOLAI, MADRAS-7.